# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2021 யூலை

## (203) வணிகச் சட்டம்

### பகுதி - A

**வினா இல. 01**

இவ்வினா 25 புள்ளிகளுக்காக 14 நோக்கச் சோதனை வினாக்களை (OTQs) கொண்டிருந்தது.

இவ்வினா வணிகச் சட்டத்தின் முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கியவாறு உப வினாக்களைக் கொண்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு விடையளிக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் **1.11, 1.12, 1.13,** ஆகிய வினாக்களுக்கு சரியான விடை அளிக்கத் தவறியிருந்ததை அவர்களது விடைகளிலிருந்து அவதானிக்கக் கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் பொருள்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் மூலகங்களைச் சரியாக ஏற்பிசைவு செய்திருக்கவில்லை. அவர்கள் பொருள்கள் விற்பனையின் உட்கிடை நிபந்தனைகளை எழுதியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகளிடம் நிதி நுண்ணறிவு அலகு மற்றும் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகியவை பற்றிய எவ்வித அறிவும் காணப்படவில்லை.

பகுதி – A இற்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பரீட்சார்த்திகள் சிவில் சட்டம், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம், அரசியலமைப்புச் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சர்வதேசச் சட்டம், முகவராண்மைச் சட்டம், மாற்றுண்டியல், மாற்றத்தகு சாதனங்கள் போன்றவை பற்றிய நல்ல அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

### பகுதி - B

**வினா இல. 02**

இவ்வினா முகவராண்மைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனராயினும் சம்பந்தமற்ற விடைகளையும் வழங்கியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு சரியான விடை அளித்திருந்தனர். **பகுதி (a)** ஆனது **சரத்** இற்கு எதிராக கம்பனியின் சட்ட உரிமைகளை ஆராயுமாறு கேட்டிருந்தது. ஆனால் அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு தவறான விடைகளை வழங்கியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் **வெள்ளை உப்பு (தனியார்) கம்பனி** பொறுப்புக் கூற வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 03

இவ்வினா காப்புறுதிச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்தது, விசேடமாக, ''காப்புறுதியின் நெருக்கமான காரணக்'' கோட்பாட்டின் பொருத்தப்பாட்டுத்தன்மையைப் பரீட்சித்திருந்தது. இது காப்புறுதிச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் சரியான விடைகளையும் வழங்கியிருந்தனர். அவர்களில் பலர் காப்புறுதியின் நெருக்கமான காரணம் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் **ராஜாவால்** பெறப்பட்ட ஆயுள் காப்புறுதியின் கீழ் கோவிட் 19 உள்ளடக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டிருக்கவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு சரியான விடைகளை வழங்கியிருந்தனர். அவர்கள் **ராஜாவின்** மனைவி என்ற வகையில் **சீதா, ராஜாவின்** ஆயுள் மீது காப்புறுத்தத்தக்க நாட்டமொன்றைக் கொண்டிருப்பதாகச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். மேலும், இறப்பானது கார் விபத்தொன்றினால் ஏற்பட்டிருப்பின் **சீதாவால்** நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 04

இவ்வினா கம்பனிச் சட்டத்துடன் தொடர்புடைய ஓரளவு இலகுவான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் **பகுதி (b)** இற்கு சரியான விடைகளை வழங்கியிருந்தனர். சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே **பகுதி (a)** இற்கு சரியான விடை அளித்திருந்தனர். அவர்களிடம் அமைப்பக விதிகள் பற்றிய எவ்வித அறிவும் காணப்படவில்லை. விசேடமாக, அமைப்பக விதிகளில் காணப்படும் கம்பனியின் நோக்கங்களுடன் தொடர்புடைய சரத்துக்கள் பற்றிய எவ்வித அறிவும் காணப்படவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை.**

## வினா இல. 05

இது தொழில் சட்டம் தொடர்பான ஓரளவு இலகுவான வினாவாகும். இங்கு தரப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் கீழும் ''ஊழியர்'' எண்ணக்கருவை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** இற்கு சரியான விடைகளை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கு சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 06

**(a)** இந்தப் பகுதியானது சர்வதேச வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். சர்வதேச வர்த்தகத்தில் உள்ள கொடுப்பனவு முறையொன்றான நாணயக் கடிதமொன்றின் வகிபாகத்தை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் நாணயக் கடிதம் பற்றிய அறிவைப் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் நாணயக் கடிதத்தின் வகிபாகம் பற்றிச் சரியாக விபரிக்கத் தவறியிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதி புலமைச் சொத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## <u>பகுதி - C</u>

**வினா இல. 07**

இந்த வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(A) இந்தப் பகுதி ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது :**

(a) அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர். அவர்கள் வைத்தியசாலைக்கும் முறையே **தீனா** மற்றும் **டோனி**க்குமிடையே வலிதான ஒப்பந்தங்கள் காணப்படுவதைச் சரியாக இனங்கண்டிருந்தனர். எவ்வாறாயினும், வேறு சில பரீட்சார்த்திகள் **டோனி**க்கு முற்பணக் கொடுப்பனவு செலுத்தப்படாததால், அங்கு வைத்தியசாலைக்கும் **டோனி**க்குமிடையே வலிதான ஒப்பந்தம் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தனர்.

(b) அதிகளவான பரீட்சார்த்திகள் ஒப்பந்த மீறுகையின் அடிப்படையில் **தீனா** மற்றும் **டோனிடிக்கு** எதிராக வைத்தியசாலையால் வழக்குத் தொடுக்க முடியும் எனக் குறிப்பிட்டிருந்ததுடன் அவர்களிடம் சேத இழப்பீட்டைக் கோர முடியும் எனவும் குறிப்பிட்டிருந்தனர். அதற்கிணங்க, அவர்களால் முழுமையான புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

(c) குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் ஒப்பந்தமானது சீர்குலைவினால் முடிவுறுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் தலையீடு காரணமாகவும் **தீனாவின்** கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறு காரணங்களாலும் ஒப்பந்தம் சீர்குலைந்துள்ளது எனவும் குறிப்பிட்டிருந்தனர். அதற்கிணங்க, அவர்களில் பலர் இந்தப் பகுதிக்கு நல்ல புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**(B) இந்தப் பகுதி பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது:**

(a) அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு சரியான விடை அளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் **கமல்** காருக்காகச் செலுத்திய முழுத் தொகையையும் கோர முடியும் எனக் குறிப்பிட்டிருந்தனர். ஏனெனில், இந்தச் சம்பவம் பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 13 (1) உடன் தொடர்புடையதாக இருப்பதுடன், அதன்படி விற்பனை விடயத்தில், ஆதனமொன்று கைமாற்றப்படும்போது பொருளை விற்பனை செய்வதற்கான உரிமையை விற்பனையாளர் கொண்டிருத்தல் வேண்டும்.

(b) இங்கு பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், ''பொருள்களுக்கு எதிராக'' பணம் செலுத்தாத விற்பனையாளர் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கும்கூட சரியான விடைகளை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

---

## பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி பரீட்சிக்கப்படும் விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவை மிகக் கவனமாக வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை எழுதவும்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** வினாத்தாளுக்கு விடையெழுதும்போது விடயங்களைச் சரியாக இனங்கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாக எழுதப்பட்டிருப் பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்களும் சுட்டெண்ணும் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சியுங்கள்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * * -